# இந்து சமயம்

## க.பொ.த. உயர்தரம்

## பாடத்திட்டம்

**(2009 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும்)**


சமயக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
2009

# 1.0 அறிமுகம்

கல்வி என்னும் எண்ணக்கருவானது அண்மைக்காலத்திலே மனித விருத்திக்கான சிந்தனைகளைச் சுட்டிக் காட்டுகின்றது. உலகின் பல்வேறு துறைகளிலும் துரித மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் கட்டிளமைப் பருவ மாணவர்கள் தமது அன்றாட வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இந்நிலையில் இவற்றை வெற்றி கொள்வதற்குத் தேவையான ஆளுமை உடையவர்களாக மாணவர்களை ஆக்குவது இப்புதிய கலைத்திட்டத்தின் எதிர்பார்ப்பாகும். மாணவர்களை மானிடப் பண்புகள் நிறைந்தவர்களாக ஆக்குவதற்கான வழிகளாகவே சமயப் பண்பாட்டுப் பாடப்புலங்கள் விளங்குகின்றன. இவ்வகையில் மனிதரைப் பண்பு உடையவராக உருவாக்குவதே கல்வியினதும் சமயத்தினதும் நோக்கமாகும். அத்துடன் இன்று மாணவ சமுதாயத்தை சமூகமயமாக்கும் சாதனங்களாகவும் அவை விளங்குகின்றன.

இந்து சமயப் பாடநெறியானது இலங்கையின் தேசிய கல்வி இலக்குகளையும் தேர்ச்சி மையக் கற்றல் கற்பித்தல் தொழிற்பாடுகளையும் இணைத்துக் கொண்டுள்ளது. அத்துடன் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்தலும், அதனூடாக அவர்களது ஆளுமையை விருத்தி செய்தலும் இப்பாடநெறி மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

- இறை நம்பிக்கை
- சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல்
- சமயச் சடங்கு முறைகளுக்கு மதிப்பளித்தல்
- அழகியல் ரசனையை விருத்தி செய்தல்
- இந்து சமய நம்பிக்கை
- மரபுவழிப் பண்பாடுகளைப் பேணுதல்
- சமூக, பொருளாதார, அறநெறிகளைக் கடைப்பிடித்தல்

என்பவற்றினூடாக மாணவர்களை நல்ல மனப்பாங்குடையவர்களாகவும் நற்பிரசைகளாகவும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, இப்பாடநெறி தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேசிய கல்வி முறை ஒன்றை வலியுறுத்தும் பாங்கில், அதன் இலக்குகளும் தேர்ச்சிகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன. அதேவேளை இந்துக்கள் தமது சமயப் பெறுமானங்களை விருத்தி செய்யக்கூடியவாறும் சமய வழிபாடுகளைப் பேணி, தமது பண்பாட்டினை மேம்படுத்தும் நோக்கிலும் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலை மாணவர் மட்டுமன்றி இப்பாடநெறியைக் கற்க விரும்பும் அனைவரும் இந்து சமயம் தொடர்பான அடிப்படைக் கருத்துக்களை அறிந்து கொள்ள இப்பாடத்திட்டம் பெரிதும் உதவியாக அமையும்.

இதற்கு முன்னர் கற்பிக்கப்பட்ட இந்து சமய பாடத்திட்டத்திலிருந்த, தற்போது நடைமுறையில் இல்லாத விடயங்கள் நீக்கப்பட்டு, நடைமுறைக்குப் பொருத்தமான விடயங்கள் சில உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.0 பாடத்திட்டத்தின் நோக்கம்

01. இந்து சமயத்தின் வரலாற்றுப் பின்னணியை, ஆதாரங்களூடாக அறிந்து கொள்ளல்.

02. வாழ்க்கையை நெறிப்படுத்தும் இந்து சமயக் கோட்பாடுகளை அறிந்து கொள்ளல்.

03. இந்து சமயச் சடங்குகளிலும், சமயப் பழக்க வழக்கங்களிலும் காணப்படும் உட்பொருள்களை உணர்ந்து, அவற்றைக் கடைப்பிடித்தல்.

04. இந்து சமய - பக்தர்கள், சித்தர்கள், மெய்பொருளாளர்கள், பெரியார்கள் பற்றிக் கற்பதன் மூலமாக, இன்றைய சமூகத்தை நெறிப் படுத்தும் வழிகளில் ஈடுபடல்.

05. இந்துக் கோயிற் கலைகள், நாட்டார் கலைகள் என்பவற்றின் முக்கியத்துவத்தை அறிந்து, அவற்றை நயத்தல்.

06. இந்து சமயப் பண்புகளை அறிந்து வாழ்க்கையில் கடைப்பிடித்தல்.

07. இந்து அறிவியல் தொடர்பான முன்னோருடைய சிந்தனையை வியந்து மதிப்பளித்தல்.

## பாடத்திட்டத்தை பாடசாலைத் தவணைக்கேற்ப வகுத்துக் கொள்வதற்கான உத்தேசத் திட்டம்

| தரம் | தவணை | தேர்ச்சி மட்டம் | பாடவேளை |
|---|---|---|---|
| **தரம் 12** | 01 | 1.1, 1.2, 1.3 | 100 |
| | 02 | 2.1, 3.1, 3.2, 4.1 | 100 |
| | 03 | 4.2, 5.1, 5.2, 5.3, 5.4 | 100 |
| **தரம் 13** | 01 | 6.1, 6.2, 6.3, 7.1, 7.2 | 100 |
| | 02 | 7.3, 7.4, 8.1, 8.2, | 100 |
| | 03 | 8.3, 8.4, 9.1, 9.2, 10.1 | 100 |

# 3.0 பாடத்திட்டம்

## 3.1 தரம் - 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **1.0 இந்துசமயத்தின் சிறப்பம்சங்களையும் அதன் வரலாற்றுப் பின்னணியையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய்வினை மேற்கொள்வதுடன், அவை மனித வாழ்வை மேம்படுத்துமாற்றைத் தெரிந்து அவற்றில் ஈடுபாடு கொள்வர்.** | 1.1 சமயம் என்பதன் பொருள் விளக்கத்தையும் இந்து சமயத்தின் சிறப்புகளையும் எடுத்துரைப்பர். | • இந்து சமயம் - அறிமுகம்<br>• இந்து சமயத்தின் சிறப்பு அம்சங்கள் | 10 |
| | 1.2 இந்து சமயத்தின் வளர்ச்சியை வரலாற்று ஆதாரங்களின் துணையுடன் கால கட்டங்களின் அடிப்படையில் விளங்கிக் கொண்டு, அவை தொடர்பான தேடலில் ஈடுபடுவர். | • இந்து சமயத்தின் இலக்கிய, வரலாற்று மூலங்கள்<br>• சிந்துவெளிச் சமய நிலை<br>• வேதம்<br>• பிராமணம்<br>• ஆரணியகம்<br>• உபநிடதம்<br>• இதிகாசம்<br>• புராணங்கள் | 40 |
| | 1.3 தமிழகத்தின் இந்து சமயம் பற்றி அறிவதன் மூலம், தமிழக மக்களின் பண்பாட்டின் பல்வேறு கூறுகளை அறிந்து, அவற்றுக்கு மதிப்பளிப்பர். | • இயற்கை நெறிக் காலம்<br>• அறநெறிக் காலம்<br>• பக்தி இயக்க காலம்<br>• சைவ வைணவ காப்பியங்களின் காலம்<br>• மடங்களும் ஆதீனங்களும்<br>  ◦ தோற்றமும் பின்னணியும்<br>  ◦ திருவாவடுதுறை ஆதீனமும், தருமபுர ஆதீனமும் | 50 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **2.0 இந்துசமயத்தில் அறுவகைச் சமயநெறிகள் வகிக்கும் பங்கினை, சான்றாதாரங் களுடன் அறிந்து, மதிப்பளிப்பர்.** | 2.1 அறுவகைச் சமயநெறிகள் பற்றி விளங்கிக் கொள்வர். | • அறுவகைச் சமயநெறிகள்<br>• சைவம்<br>• வைணவம்<br>• சாக்தம்<br>• காணாபத்தியம்<br>• கௌமாரம்<br>• சௌரம் | 20 |
| **3.0 பக்தர்களதும் சித்தர்களதும் பணியினை இனங்கண்டு, மேம்பட்ட வாழ்வை வாழ முன்வருவர்.** | 3.1 பக்தர்களது வகைகளையும் அவை பற்றிய விளக்கங்களை யும் எடுத்துரைப்பர். | • பக்தர்கள், சித்தர்கள் விளக்கம்<br>• நாயன்மார் நால்வரும் அவர்களது பணிகளும்<br>• திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்<br>• திருநாவுக்கரசு நாயனார்<br>• சுந்தரமூர்த்தி நாயனார்<br>• மாணிக்கவாசக சுவாமிகள்<br>• ஆழ்வார்களும் அவர்களது பணிகளும்<br>• நம்மாழ்வார்<br>• பெரியாழ்வார்<br>• ஆண்டாள் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 3.2 ஞானியர் மரபு பற்றி அறிந்து, அதற்கு மதிப்பளிப்பர். | • மறைஞானம்: அறிமுகம்<br>• சித்தர்கள்<br>  • பதினெண் சித்தர்கள் அறிமுகம்<br>  • திருமூலர்<br>  • சிவவாக்கியர்<br>• ஈழத்துச் சித்தர்கள்<br>  • நவநாதச் சித்தர்<br>  • சித்தானைக்குட்டி சுவாமிகள்<br>  • பெரியானைக்குட்டி சுவாமிகள்<br>  • கடையிற் சுவாமிகள் | 20 |
| **4.0 பண்பாட்டு வளர்ச்சியில் இந்துக் கோயிற் கலைகளும் நாட்டார் கலை களும் பெறும் முக்கியத்துவத் தினை அறிந்து அவற்றை நயப்பர்.** | 4.1 கோயிற் கலைமரபின் பல்வேறு அம்சங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தினையும் விளங்கிக் கொள்வர். | • கட்டடக் கலை<br>• சிற்பக் கலை<br>• ஓவியக் கலை<br>  • தஞ்சைப் பெருங்கோயில்<br>  • மதுரை மீனாட்சியம்மன் ஆலயம்<br>• விக்கிரகக் கலை<br>  • தட்சணாமூர்த்தி மூர்த்தம்<br>  • நடராஜர் மூர்த்தம்<br>  • சோமாஸ்கந்த மூர்த்தம்<br>• இசைக் கலை<br>  • பண்ணிசை | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 4.2 நாட்டார் கலைமரபின் பல்வேறு சிறப்பியல்புகளையும் அறிந்து, அவற்றை நயப்பர். | • நாட்டார் கலைகள்<br>• கூத்து<br>• காவடி<br>• கரகம்<br>• வசந்தனும் கோலாட்டமும் | 20 |
| **5.0 இலங்கையில் இந்துசமயத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் பண்பாட்டுச் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவற்றுக்கு மதிப்பளிப்பர்.** | 5.1 இலங்கையில் இந்துசமயத்தின் வரலாற்றுச் சுருக்கத்தை ஆதாரங்களின் மூலமாக முன்வைப்பர். | • இலங்கையில் இந்து சமயம்<br>• வரலாற்றுச் சுருக்கம் | 20 |
| | 5.2 இலங்கையில் உள்ள இந்துக் கோயில்களது வரலாறு, பண்பாடு பற்றி அறிந்து, அவற்றைப் பாதுகாக்க முன்வருவர். | • திருக்கேதீச்சரம்<br>• நகுலேஸ்வரம்<br>• திருக்கோணேச்சரம்<br>• ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம்<br>• பொறுநறுவைக் கோயில்கள்<br>• கதிர்காமம்<br>• திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம்<br>• மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் | 36 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 5.3 இலங்கையில் இந்துசமயத்தின் வளர்ச்சிக்காகத் தொண்டாற்றிய பெரியார்கள் பற்றி அறிந்து, அவர்களுக்கு மதிப்பளிப்பதுடன் தாமும் சமயப் பணியாற்ற முயற்சிப்பர். | • பசுபதிச் செட்டியார்<br>• இந்துபோர்ட். சு. இராசரத்தினம்<br>• சேர். பொன். இராமநாதன் | 14 |
| | 5.4 இலங்கையில் இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பினை ஏற்று, அவற்றை உரிய முறையில் பயன் படுத்துவர். | • ஊடகம்<br>  • விளக்கம்<br>  • ஊடக வகையும் அவற்றின் தொழிற்பாடுகளும்<br>  • சமகாலத் தொடர்பாடல்களும் இந்து சமயமும் | 10 |

## 3.2 தரம் - 13

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **6.0 இந்து சமய தத்துவ சிந்தனைகளின் அடிப்படைக் கருத்துக்கள் அவற்றின் உண்மைத்தன்மை என்பனவற்றைக் காரண காரியங் களூடாக முன்வைப்பர்.** | 6.1 அறிவுக்குரிய வழிகளை எடுத்துக்காட்டுகளுடன் முன்வைப்பர். | • அறிவுக்குரிய வழிகள்<br>• காண்டல்<br>• கருதல்<br>• உரை | 10 |
| | 6.2 இந்து தத்துவ அடிப்படைச் சிந்தனைகள் பற்றிய விளக்கத்தை பெறுவர். | • இந்து தரிசனங்கள் பற்றிய விளக்கம்<br>• சாங்கியம்<br>• யோகம்<br>• மீமாம்சை<br>• நியாயம்<br>• வைசேடியம் | 30 |
| | 6.3 வேதாந்த தத்துவ சிந்தனை களைப் பகுப்பாய்வு செய்து, அவற்றுக்கு மதிப்பளிப்பர். | • வேதாந்தம் ஓர் அறிமுகம்<br>• பிரமசூத்திரம்<br>• அத்வைதம் பற்றிய விளக்கம்<br>• அத்வைதம்<br>• விசிட்டாத்வைதம்<br>• துவைதம் | 40 |
| **7.0 சைவசித்தாந்த மெய்ப்பொருளி யலை ஆராய்ந்து விளங்கிச் செயற்படுவர்.** | 7.1 சைவசித்தாந்த மெய்ப் பொருளியலை பிரமாணங்கள் ஊடாக முன்வைப்பர். | • சிவஞானசித்தியார் கூறும் பிரமாணங்கள் - விளக்கம் | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 7.2 அத்வைதம், சைவ சித்தாந்தம் என்பவற்றுக்கிடையிலான விளக்கத்தைத் தர்க்க ரீதியாக முன்வைப்பர். | • அத்வைதம், சைவசித்தாந்தம் என்பவற்றின் ஒப்பீட்டு விளக்கம் | 10 |
| | 7.3 சைவசித்தாந்த மெய்ப்பொருட் கோட்பாடுகளை ஆதாரங் களுடன் விளங்கிக் கொள்வர். | • முப்பொருள்கள் (பதி, பசு, பாசம்)<br>• முத்திக் கோட்பாடு<br>• முத்தி பெறுவதற்குரிய மார்க்கங்கள்<br>  • சரியை, கிரியை, யோகம், ஞானம்<br>  • குரு லிங்க, சங்கம வழிபாடு<br>  • தீட்சை<br>  • பஞ்சாட்சர மந்திரம்<br>  • சிவசின்னங்கள் | 50 |
| | 7.4 தென்னிந்திய மெய்ப்பொருளிய லாளர்களின் பணிகளை முன்வைப்பர். | • மெய்கண்டார்<br>• உமாபதி சிவாசாரியார் | 10 |
| **8.0 சமய வாழ்வில் ஆலய வழிபாடு, விழாக்கள், விரதங்கள் என்ப வற்றின் முக்கியத் துவத்தினை இனங் கண்டு, அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவர்.** | 8.1 ஆகமமுறை சார்ந்த ஆலய வழிபாட்டின் முக்கிய அம்சங்களை இனங்கண்டு, அவற்றைக் கடைப்பிடிப்பர். | • ஆகமம் - ஓர் அறிமுகம்<br>• ஆகமம் என்பதன் பொருள் மரபு<br>• ஆகமம் கூறும் ஆலய அமைப்பு முறை<br>• ஆகமமும் திருவுருவ வழிபாடும்<br>• ஆகமம் கூறும் ஆலயக் கிரியை முறைகளும் தத்துவங்களும்<br>• ஆலய வழிபாட்டு விதிமுறைகளும் பயன்களும் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 8.2 ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளின் முக்கிய அம்சங் களை இனங்கண்டு, அவற்றுக்கு மதிப்பளிப்பர். | • கண்ணகி அம்மன்<br>• மாரியம்மன்<br>• ஐயனார்<br>• அண்ணமார்<br>• பெரியதம்பிரான் | 20 |
| | 8.3 இந்து சமயப் பண்டிகைகளின் முக்கியத்துவங்களை இனங் கண்டு, அவற்றைக் கொண்டாடுவர். | • பண்டிகைகள்<br>  • தைப்பொங்கல்<br>  • (சித்திரை) வருடப்பிறப்பு<br>  • தீபாவளி | 12 |
| | 8.4 இந்து சமய விரதங்களின் முக்கியத்துவங்களை இனங் கண்டு, அவற்றை அனுட்டிப்பர். | • இந்து சமய விரதங்கள்<br>  • சிவ விரதங்கள்<br>    • சிவராத்திரி விரதம்<br>    • பிரதோச விரதம்<br>  • சக்தி விரதங்கள்<br>    • நவராத்திரி<br>    • வரலட்சுமி விரதம்<br>  • விநாயகர் விரதங்கள்<br>    • பெருங்கதை விரதம் (விநாயகர் சஷ்டி விரதம்)<br>    • விநாயகர் சதுர்த்தி விரதம்<br>  • முருக விரதங்கள்<br>    • கந்த சஷ்டி விரதம்<br>  • வைரவ விரதங்கள்<br>  • விஷ்ணு விரதங்கள்<br>    • வைகுண்ட ஏகாதசி | 28 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **9.0 மனித வாழ்வு செம்மையுறுவதுடன் ஆன்மிக மேம்பாடு உடையதாகவும் அமைவதற்கு அறவழியிலான செயற்பாடுகளை மேற்கொள்வர்.** | 9.1 இந்து அறவியல் நூல்களின் முக்கியத்துவத்தினை அறிந்து, அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்துவர். | • அறவியல்<br>  • ஓர் அறிமுகம்<br>• புருடார்த்தங்கள்<br>• ஆச்சிரம தர்மங்கள்<br>• தமிழ் நீதிநூல்கள்<br>  • திருக்குறள்<br>  • ஆத்திசூடி<br>  • நல்வழி | 34 |
| | 9.2 மூவகை யோகங்களின் விளக்கங்களை அறிந்து, பின்பற்றுவர். | • மூவகை யோகங்கள்<br>  • யோகம்: அறிமுகம்<br>  • கருமயோகம்<br>  • பக்தியோகம்<br>  • ஞானயோகம் - அறிமுகம் | 16 |
| **10.0 இந்து அறவியல் காலத்தோடும் தேவைகளோடும் இணங்கியும் இசைந்தும் மனிதவாழ்வை மேம்படுத்து மாற்றினைக் கண்டறிவர்.** | 10.1 இந்து அறிவியல் தொடர்பான விளக்கங்களை ஆராய்ந்தறியும் முயற்சிகளில் ஈடுபட்டு, முன்னோரின் அறிவியல் சிந்தனைகளுக்கு மதிப்பளிப்பர். | • இந்துக்களின் அறிவியற் சிந்தனைகள்<br>  • ஓர் அறிமுகம்<br>• இந்து மருத்துவம்<br>• சோதிடவியல் | 10 |

## 4.0 கற்றல் - கற்பித்தல் முறை

கற்றல் என்பது வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதாகும். கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவுமட்டமானது, பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது.

இங்கு மாணவர்களது வாழ்வியலுக்குத் தேவையான ஆக்கத் திறன், கற்பனைத் திறன், தொடர்பாடல் திறன், சமூகத் திறன் முதலானவற்றையும் ஒழுக்கம், விழுமியம், ஆன்மீகம் சார்ந்த பண்புகளையும் விருத்தி செய்யக்கூடிய கற்றல் முறையை மேற்கொள்ளல் பொருத்தமானது. குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினூடாக மாணவர் நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும் நிலையானதுமான மாற்றமொன்றை இலக்காகக் கொண்டதாகக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும். இம்முறை மனப்பாங்கு விருத்தி, நடத்தை மாற்றம் என்பவற்றை மாணவரிடம் விருத்தி செய்யக்கூடியதாக கற்றல் - கறபித்தல் செயற்பாடுகள் அமைதல் பொருத்தமானது.

இப்பாடத்திட்டத்தில் சமயம்சார் செயன்முறை அனுபவங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், மாணவரின் செயற்பாடு, பங்குபற்றல் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும். பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடைய வேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்தபட்ச அடைவுமட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்ய வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். அத்துடன் மாணவரைச் சரியாக இனங்கண்டு, கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவுமட்டத்தை எய்துவதற்கு வழிகாட்டுவதும் அவர்களது கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை விரிவாக்கும்போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- வினாவிடைப்புத்தகம்
- விவாதம்
- குழுக் கலந்துரையாடல்
- கருத்தரங்கு
- கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல்
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப் புத்தகம்

# 5.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

இந்து சமயம் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், ஆற்றல் மிக்கோரை உருவாக்குவதற்கும், சமயக் கல்வியையும் அதன் பாரம்பரியத்தையும் வளர்த்தெடுப்பதற்கும் பொருத்தமான பின்னணியைப் பாடசாலைகளில் உருவாக்கத்தக்க வகையில், பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இயைவுபடுத்தப்படல் அவசியமாகும்.

இப் பாடத்தினூடாக, புதிய ஆக்கபூர்வமான சிந்தனையின்பால் மாணவர் வழிப்படுத்தப்படுவர். அவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பாடசாலை வேலைத்திட்டத்தை அமைத்துக் கொள்ளல் பொருத்தமுடையதாகும். இப்புதிய பாடத்திட்டத்தை பாடசாலையில் அமுலாக்கும்போது எமது சமய பாரம்பரியங்களைப் பின்பற்றும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைக்கலாம்.

- குருபூசை, பாடசாலைச் சமய விழா முதலான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- சமய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- மாணவரின் ஒத்துழைப்புடன் கூட்டாகச் செயற்படக்கூடிய சைவசமய மன்றங்களை அமைத்து நடத்தல்.
- சமயம் தொடர்பான கல்விக் கண்காட்சிகளை வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் நடத்த ஒழுங்கு செய்தல்.
- பாட விடயம் தொடர்பான முக்கிய இடங்களுக்கு வெளிக்கள, சமயச் சுற்றுலாக்களைத் திட்டமிட்டு, நிறைவேற்றுதல்.
- ஒப்படைகள், செயற்றிட்டங்கள், புத்தாக்கம் போன்றவற்றில் ஈடுபட மாணவரை ஊக்குவித்தல்.
- வெவ்வேறு தலைப்புகளில் திட்டமிடப்பட்ட விவாதங்கள், உரையாடல்கள் போன்றவற்றை நடத்துதல்.
- சமயக் கருத்தரங்குகள், சமய விழாக்கள் என்பவற்றில் பங்குகொள்ள ஊக்குவித்தல்.

மேற்கூறியவற்றினூடாக மாணவரின் பல்வேறு திறன்களும், மனப்பாங்குகளும் விருத்தியடையக்கூடிய வகையில் செயற்பாடுகளை வழங்கலாம்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத்

தேவையான வசதிகளையும் ஒத்துழைப்பையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கைகள், வேலைத்திட்டங்களிலிருந்து சற்று விலகி, பாடசாலைக்கெனச் சிறப்பான கொள்கையையும் வேலைத்திட்டத்தையும் வகுத்துக் கொள்ளல் வேண்டும். அத்துடன் தரவிருத்தி உள்ளீடுகளைச் இப் பாடத்திற்கும் பயன்படுத்த வேண்டும். அதனை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக, பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியையும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காக, தகைமை வாய்ந்த பட்டதாரி ஆசிரியரை ஈடுபடுத்தலும் பயனுறுதிமிக்க நேரமுகாமையும் மிக அவசியம்.

ஒவ்வொரு சமய வகுப்பு ஆசிரியரும் தமது வகுப்பில் பயிலும் மாணவர்களைக் கீழ்வரும் ஏழு நற்பழக்கங்களை உடையவர்களாக ஆக்குதல் வேண்டும்.

- கடவுள் பக்தி
- ஒழுக்கம்
- சமய அறிவில் ஆர்வம்
- மூத்தோரிடம் மரியாதை
- தியானமும், தொண்டும
- எமது சமய நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல்

மாணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குவதை ஆசிரியர்கள் இலட்சியமாகக் கொண்டு செயற்பட வேண்டும்.

பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்துவதனால், அடுத்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட புத்தாக்கம் புரிவோரையும் மனிதப் பண்புள்ளவர்களையும் குறைவின்றி உருவாக்கலாம் என்பதில் ஐயமில்லை.

## 6.0கணிப்பீடும்   மதிப்பீடும்

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தவணைக்குமென நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் என்பன உள்ளடங்கும் விதத்தில் கணிப்பீட்டுக்கருவிகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பாடத்திட்டமானது தரம்- 13 இன் இறுதியில் இடம் பெறுகின்ற தேசிய மட்டக் கணிப்பீடான க.பொ.த. உயர்தர பரீட்சைக்குரியதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் தேசிய மட்ட்த்தில் நடத்தப்படுகின்ற முதலாவது பரீட்சை 2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரத்தின் அமைப்பு, மாதிரி பற்றிய தெளிவான விபரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும்.